385--

தமிழகத்தில் காலரா நோயினால் உயிர் இழப்பைத் தவிர்க்கத் திட்டம்.

15469--திரு. சி. இராமசுவாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டு உயிர் இழப்பதைத் தவிர்க்க அரசிடம் நிரந்தரத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

(இ) 1992-93 ஆம் ஆண்டில் காலராவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். வயிற்றுப்போக்கு/காலரா நோயினைக் கட்டுப்படுத்த நிரந்தர முறைகள் அவ்வப்போது கையாளப்படுகின்றன.

(ஆ) (1) காலரா நோய் குடிநீரின் மூலம் பரவும் நோயாகும். ஆண்டு முழுவதிலும் நீர் வழங்கும் நிலையங்களில் குளோரினேஷன் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது.

(2) உணவு விடுதிகளில் பேணுதல் மற்றும் உணவு வழங்குபவர்களின் தன் சுத்தம் பேணுதல் போன்றவைகளை கடைப்பிடிக்குமாறு அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

(3) பொது மக்களுக்கு அவ்வப்போது தன் சுகாதாரம் பேணும் முறைகளையும் சுற்றுப்புறத்தை 'ஈ' பரவாவண்ணம் தூய்மையாக வைத்துக்கொள்வதின் அவசியத்தைப் பற்றியும் உப்புநீர்க் கரைசல் பொட்டலங்களின் உபயோகத்தைப் பற்றியும் சுகாதாரக் கல்வி மூலம் போதிக்கப்படுகிறது.

(இ) 1992 அக்டோபர் முதல் மார்ச் 1993 (17-3-1993) முடிய காலரா நோயினால் 3905 நபர்கள் பாதிக்கப்பட்டு 6 பேர்கள் இறந்தனர், மற்றும் 4781 நபர்கள் வயிற்றுப் போக்கு நோயினால் பாதிக்கப்பட்டு 1281 நபர்கள் இறந்தனர்.